நாள்: 02.07.2026
OP 259/2025
பெயர் மணிமேகலை
ம.சா.1

**<u>குறுக்கு விசாரணை</u>**

கவிதா என்பவர் என் கணவரின் மூத்த சகோதரி ஆவார். அவருக்கு என் திருமணத்திற்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது. அவர் திருமணம் ஆகி அவர் கணவருடன் தனியாக குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. எங்கள் பக்கத்து வீட்டில் தான் குடியிருந்தார். கவிதாவுக்கும் திருமணம் ஆகி குழந்தைகள் இருக்கிறது. அவரும் வேலை பார்த்து வருகிறார். நான் என் கணவருடன் இருந்த நாள் வரை நான் என் கணவருடன் திருப்பூரில் உள்ள தனியார் கம்பெனிக்கு வேலை பார்த்தேன். நாங்கள் சேர்ந்த வாழ்ந்த வரை மகிழ்ச்சியாக தான் இருந்தோம் என்றால் சரியல்ல. அடிக்கடி என் கணவர் என்னை விட்டு போய்விடுவார். என் கணவர் ஒரே வீட்டிற்குள் நாங்கள் இருந்தாலும் என்னிடம் பேச மாட்டார் அதனால் நான் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுவேன். என் கணவர் அவவ்போது 3 ஆண்டுகள் என்னை விட்டு சென்றுவிடுவார் என்ற விவரத்தை என்னுடைய மனு மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எனக்கு பெண் குழந்தை உள்ளது. லியோனார்டு மருத்துவமனையில் எனக்கு மருத்துவ சிகிச்சை மூலம் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். ஆனால் செயற்கை கருத்தரித்தல் மூலம் பிறக்கவில்லை . 6 ஆண்டுகளாக தொடர் சிகிக்சை எடுத்து வந்தேன். சிகிச்சையின் போது என் கணவர் என்னுடன் மருத்துவமனைக்கு வந்தார் என்றால் சரிதான். 22.02.2009 ல் எனக்கு திருமணம் நடைபெற்றது. எனக்கு இயல்பாக குழந்தை ஏற்பட பிரச்சனை உள்ளது என்ற விவரம் திருமணம் ஆகி 3 வருடங்கள் கழித்து தெரிந்தது. அடிக்கடி நான் கருவுற்று பின்னர் ஒருரிரு மாதங்களில் கருசிதைவு ஏற்படும். 28.01.2016 ல் என் மகள் பால தர்ஷினி பிறந்தார். 2012-2016 ஆண்டுகளில் நானும், என் கணவரும் மருத்துவ சிகிச்சை எடுத்து மருந்து எடுத்துக்கொண்டதால் தான் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். குழந்தை பிறந்த பின்னர் கானல்காட்டில் உள்ள என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். என் மகளுக்கு 1 1/4 வயதாகும்போது மீண்டும் திருப்பூர் வந்தேன். என் மகளை பள்ளியில் சேர்க்கும்போது என் கணவருடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் சரியல்ல. என் மகள் 1 3/4 வயதிருக்கும்போது நான் மீண்டும் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

என் மகளுக்கு 4 வயதாகும்போது தான் திருப்பூர் என் கணவர் வீட்டிற்கு வந்தேன். மேற்படி சங்கதிகளை என்னுடைய மனு மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தோம் என சொல்லியுள்னேன். ஆனால் 1 1/4 வருடம் தான் சந்தோசமாக இருந்தோம். மேற்படி சங்கதிகளை என்னுடைய மனு மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் நாத்தனார் கவிதா அடிக்கடி என்னிடம் சண்டை போட்டடார் என என் மனுவில் சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. கவிதா மகள் சந்தியாவிற்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் ஞாபகம்இல்லை. 5 லட்சம் ரேவதி, மற்றும் உமாவிடம் என் கணவர் அவரது அக்கா மகள் திருமணத்திற்கு கடன் வாங்கினார்.

5 லட்சம் பணத்தை என் கணவர் ரொக்கமாக கொடுத்தாரா என்றால் இல்லை. 2 1/2 பவுன் செயினாக எடுத்துக்கொடுத்தார். நான் 3 ஆண்டுகள் வேலை பார்த்த சம்பளம்

மற்றும் 5 பவுன் நகையை என் கணவரிடம் கொடுத்தேன். நானும், என் கணவரும் ஒன்றாக இருந்த காலத்தில் நாங்கள் இருவரும் சேர்ந்து தான் செலவு செய்தோம். நான் என் மனுவில் என் கணவர் 5 லட்சம் கடன் வாங்கியதாக தான் சொல்லியுள்ளேனே தவிர நகை வாங்குவதற்காக 5 லட்சம் கடன் வாங்கினார் என சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் கல்யாண செலவுக்கு தான் பணத்தை கொடுத்தார்.

என் கணவர் மாத வாடகைக்கு கூட பணம் தரவில்லை என நான் சொல்லியுள்ளேன். திருப்பூரில் ஒரே வீட்டில் தான் இருந்தோம். என் கணவர் மாத வாடகை கொடுக்கவில்லை என்றால் வீட்டு உரிமையாளர் வீட்டை காலி செய்ய சொல்லியிருப்பார் என்றும், என் கணவர் வாடகை கொடுத்ததால் தான் வீட்டை காலி செய்ய சொல்லவில்லை என்றால் சரியல்ல். நான் வேலைக்கு போய் தான் வாடகை கொடுத்தேன்,. நான் தனியாக 1 ஆண்டுகள் வாடகைக்கு இருந்து வந்தேன். அப்போது என் மகள் 4ம் வகுப்பு படித்து வந்தார். என் மகள் தனியார் பள்ளியில் தான் படித்தார். pre–KG to 4 std வரை தனியார் பள்ளியில் திருப்பூரில் தான் படித்தார். இந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது என் கணவர் என்னையும், என் மகளையும் பார்ப்பதற்கு என் பெற்றோர் வீட்டிற்கு வந்தார்.

என் கணவர் என் மகளிடம் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக சொன்னார் என்னிடம் சொல்லவில்லை. என் கணவர் என் அம்மா வீட்டிற்கு வந்தபோது நான் அவரை உபசரிக்கவில்லை. என் மகளை மட்டும் தான் பார்த்தார். என் பெற்றோரும் அவரை கூப்பிடவில்லை. என் பெற்றோரை என்கணவர் அடித்ததால் அவர் வீட்டிற்கு வந்தபோத அவரிடம் எதுவும் கேட்கவில்லை. நான் என்ன நிபந்தனை விதித்தாலும் என் கணவர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் நான் சேர்ந்து வாழ தயாராக இல்லை. நான் சேர்ந்து வாழ மாட்டேன். என் மகளையும் என் கணவரிடம் ஒப்படைக்க மாட்டேன்.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோலுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்